


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## டிசம்பர் - 15.12.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்












## இந்திய நிகழ்வுகள்

- இந்தியாவிற்குள் சர்வதேச முதலீடுகளை அதிகளவில் ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்ட **"ஸ்டார்ட் அப் இந்தியா துணிகர மூலதன உச்சி மாநாடு – 2018** – ஆனது **கோவாவில்** நடைபெற்றது. **(Global Venture Capital Summit – 2018)**
    - இந்த மாநாட்டின் கருத்துரு: - **"இந்தியாவில் புத்தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக உலக முதலீடுகளை திரட்டுதல்"** என்பதாகும்.

- **ஆளில்லா வான்வழி வாகனங்கள்** தயாரிப்பதற்கான இந்தியாவின் முதல் தனியார் துறை அலகு **(UAV – Unmanned Aerial Vehicles)** தெலுங்கானா மாநிலத்தின் தலைநகரான ஹைதராபாத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **175வது** எண்ணெய் மற்றும் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பின் **(Organization of Petroleum Exporting Companies – OPEC)** கருத்தரங்கு மற்றும் **5வது OPEC – உறுப்பினர் மற்றும் OPEC உறுப்பினர் அல்லாத நாடுகளின் அமைச்சர்கள் மாநாடு** ஆஸ்திரியாவின் வியன்னாவில் நடைபெற்றது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **2020ம்** ஆண்டிற்கான **ஆசிய கோப்பை டி-20 கிரிக்கெட் தொடரை** நடத்தும் உரிமையை பாகிஸ்தான் பெற்றுள்ளது.
    - இந்த அறிவிப்பினை **ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் நாஸ்முல் ஹாசன் பாப்பான்** வெளியிட்டுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **நாசாவின் "OSIRIS – REX"** என்னும் விண்கலமானது, சிறுகோளான பென்னு – வில் **(Bennu)** நீர் இருப்பதற்கான ஆதாரங்களை

கண்டறிந்துள்ளது.

- OSIRIS – REX என்ற விண்கலத்தில உள்ள **OTES – Thermal Emission Spectrometer** மூலம் ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனை இணைக்கக்கூடிய **"ஹைட்ராக்ஸில்"** மூலக்கூறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## விருதுகள்

- பிரிட்டனின் புகழ்பெற்ற கலைக்கு வழங்கும் உயரிய விருதான **டர்னர் - 2018** – விருதானது, கிளாஸ்கோவைச் சேர்ந்த கலைஞர் **"சார்லோட் ப்ரோட்கர்"** என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - இவர் தனது **BRDGIT** என்ற 33 நிமிட படத்திற்கு இந்த விருதினைப் பெற்றார்.

- மத்திய அரசின் விவசாயத்துறை சார்பில் வழங்கப்படும் விவசாயத்தின் மேம்பாட்டுக்கான **"கிரிஷி கர்மன்" (Krishi Karman Award)** விருது **"ஜார்கண்ட்"** மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
  - அரிசிக்கான விளைச்சலில் அதிக பங்குபெற்றதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- நியூ இந்தியா ஆஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராக **(Chairman and Managing Director – CMD) அதுல் சஹாய்** – என்பவரை மத்திய அரசு நியமித்துள்ளது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் - டிசம்பர் 14 (National Energy Conservation Day)**
  - ஆற்றலின் திறன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 14 அன்று தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது.

We Shine Academy